DEPOSITION OF WITNESS
In the court of District Munsif Cum Judicial Magistrate Court, Uthukottai,
CC. No. 136 of 2025
Prosecution witness: LW- 1 PW-1

| | |
|---|---|
| Name | சக்கரவர்த்தி |
| Fathers / Husband name | சின்னசாமி |
| Village | வேலூர் |
| Age | 62 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026.

முதன்மை விசாரனை நேரம் - 12.00

1. நான் கடந்த 14.03.2024 அன்று பொயபாளையம் 130கேவி துணை மின் நிலையத்தில் இளநிலை மின் பொறியாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்று வேலூர் மாவட்டத்தில் வசித்து வருகிறேன். கடந்த 14.03.2024ம் தேதி இரவு பணியில் திரு.சீனிவாசன் மற்றும் சிவராமன் ஆகியோர் முறை பணி செய்து வந்தார்கள். அப்போது 11கேவி கல்பட்பிடரில் மன் துண்டிப்பு ஏற்பட்டு இருந்தது. இரவு நேரம் என்பதால் அல்இல்லாத காரணத்தினால் மின் துண்டிப்பை சரிசெய்ய காலதாமதம் ஏற்பட்டது. அப்போது பேட்டை மேட்டை சேர்ந்த கார்த்திக் என்பவர் மின்நிலையத்திற்கு வந்து பணியில் இருந்த சீனிவாசன் மற்றும் சிவாராமனை அரசு பணி செய்யவிடாமல் தவிர்த்து தகாத வார்த்தைகளால் பேசி, மின் துண்டிப்பை சரிசெய்யவிட்டால் கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டியுள்ளார். இரவு பணி செய்த சீனிவாசனும் மற்றும் சிவராமனும் என்னிடம் கூறினார்கள் அதன் பேரில் நான் எதிரி மீது நடவடிக்கை எடுக்ககோரி காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவை நான் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. அந்த புகார் மனு அ.சா.ஆ1ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

சாட்சியம் முடிவுற்ற நேரம் 12.08.